www.freetnbooks.com

| அரையாண்டுப் பொதுத்தேர்வு - 2025 | பதிவெண் | 8 1 1 1 0 6 |
|---|---|---|

# XI - தமிழ்

நேரம் : 3-00 மணி | மதிப்பெண்கள் : 90

## பகுதி - I

***அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.*** (14x1=14 )

1. " மொழிதான் ஒரு கவிஞரை நிகழ்காலத்தவரா அல்லது இறந்த காலத்தவரா என்பதை நிர்ணயிக்கிறது" எனக் கூறியவர்________ .
   அ) வால்ட் விட்மன் ஆ) எர்னஸ்ட் காசிரர் இ) ஆற்றூர் ரவிவர்மா ஈ) பாப்லோ நெருடா
2. பொருத்தமானதைத் தேர்ந்தெடுக்க.
   அ) மல்லார்மே - யுகத்தின் பாடல்
   ஆ) இன்குலாய் - ஒவ்வொரு புல்லையும்
   இ) ஸ்டெஃபான் மல்லார்மே - புல்லின் இதழ்கள்
   ஈ) இந்திரன் - பேச்சுமொழியும் கவிதைமொழியும்
   அ) அ, ஆ ஆ) அ, ஈ இ) ஆ, ஈ ஈ) அ, இ
3. கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவை________ . i) மதிப்புக் கூட்டுப் பொருள்கள் ii) நேரடிப் பொருள்கள்
   அ) i) - மட்டும் சரி ஆ) ii) - மட்டும் சரி இ) இரண்டும் சரி ஈ) i) - தவறு, ii) சரி
4. ‘உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்’ என்று கூறியவர்.
   அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) நாமக்கல் கவிஞர் ஈ) கவிமணி
5. *பொருத்துக.*
   அ) வாழ்பவன் - 1. காத்திருப்பவன்
   ஆ) வாழாதவன் - 2. ஒத்ததறிபவன்
   இ) தோன்றுபவன் - 3. புகழ் தரும் பண்புடையவன்
   ஈ) வெல்ல நினைப்பவன் - 4. இசையொழித்தவன்
6. " விண்பொரு நெடுவரை குறிஞ்சிக்கிழவ" என்று உரைக்கும் நூல்.
   அ) கூத்தராற்றுப்படை ஆ) திருமுருகாற்றுப்படை இ) பொருநராற்றுப்படை ஈ) தொல்காப்பியம்
7. " விடையைக் கண்டேன் என்றுரைத்தாய் - ஒரு
   வினாவாய் நீயே நிற்கின்றாய்" - என்று உரைப்பவர் ________ .
   அ) பிரமிள் ஆ) அழகிய பெரியவன் இ) அப்துல் ரகுமான் ஈ) இரா. மீனாட்சி
8. ‘சில நேரங்களில் சில மனிதர்கள்’ என்னும் புதினத்தின் ஆசிரியர்.
   அ) ஜெயகாந்தன் ஆ) பிரபஞ்சன் இ) புதுமைப்பித்தன் ஈ) ஜெயமோகன்
9. ***கூற்று*** - எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பதிற்றுப்பத்து, புறம் சார்ந்த நூல்.
   ***காரணம்*** - சேரமன்னர் பதின்மரின் சிறப்புகளைக் கூறுகிறது இந்நூல்.
   அ) கூற்று சரி ; காரணம் தவறு ஆ) இரண்டும் சரி
   இ) இரண்டிற்கும் தொடர்பில்லை ஈ) கூற்று தவறு ; காரணம் சரி
10. சொற்களை அல்லது எழுத்துகளைச் சேர்க்கவும். இடைவெளி விட வேண்டாம் - இதற்கான குறியீடு. அ) # ஆ) ⁀ இ) ⅂ ஈ) ÿ
11. ‘அழகும் அறிவும் இளமையும் வாய்ந்தவன்’ - யார் யாரிடம் கூறியது?
   அ) அமைச்சர் கவிஞரிடம் ஆ) மன்னர் அமைச்சரிடம்
   இ) அமைச்சர் மன்னரிடம் ஈ) மன்னர் அமுதவல்லியிடம்
12. ஜனப்பிரளயம் என்னும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல்லைத் தேர்க.
   அ) மக்கள் அலை ஆ) உயிர் அலை இ) மக்கள் வெள்ளம் ஈ) மக்கள் அவை
13. SHIP என்னும் ஆங்கிலச் சொல்லின் பழந்தமிழ் இலக்கியப் பெயரைக் கூறுக.
   இ) கப்பல் ஆ) படகு இ) நாவாய் ஈ) தோணி
14. ஆனந்தரங்கர் காலத்தில் வழக்கில் இருந்த நாணயங்களில் 480 காசு என்பது எதைக் குறிக்கும்? அ) ஒரு ரூபாய் ஆ) 1 பணம் இ) ஒரு வராகன் ஈ) $\frac{1}{2}$ வராகன்

## பகுதி - II - பிரிவு-1

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி.** *(3x2=6)*

15. ஐங்குறுநூறு - குறிப்பு வரைக.
16. மருந்து எது? மருந்து மரமாக இருப்பவர் யார்?
17. உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தன யாவை?
18. "இங்கே, ஐம்பதாண்டு வேம்பு
    கோடையில் கொட்டும் பூக்களை
    எண்ணச் சொல்கிறார்கள்"- எண்ணச் சொல்கிறவர்கள்
    யார்? எண்ணுபவர்கள் யார்-?

### பிரிவு-2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** *(2x2=4)*

19. ஐந்து வேளாண்மை மந்திரங்கள் யாவை?
20. உ.வே.சா.அவர்கள் பயின்ற கல்விமுறை குறித்துக் குறிப்பு வரைக.
21. ‘நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல்’ என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.

### பிரிவு- 3

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடைத்தருக.** *(7x2=14)*

22. ***புணர்ச்சி விதி தருக.*** அ) நீரோடை (அல்லது) ஆ) உழுதுழுது



www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with OKEN Scanner

www.freetnbooks.com

23. *பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக :-*
தேர்வெழுத வேகமாப் போங்க, நேரங்கழிச்சிப் போனாப் பதட்டமாயிரும்.
24. *மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.* கலை, களை, கழை
25. *வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.*
கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளை புரிந்து பேசுவர்.
26. *செய்தித் தொடராக மாற்றுக:-* என்னே ! மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சிற்பக் கலை.
27. *மரபுச்சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக:-*
அ) சொந்தக்காலில் நிற்றல் (அல்லது) ஆ) எதிர்நீச்சல்
28. *சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க:-* அ) பிண்ணாக்கு (அல்லது) ஆ) வைகை
29. *இலக்கணக்குறிப்பு தருக:-* அ) கடிநகர் ஆ) புழுக்களும் பூச்சியும்
30. பகுபத உறுப்புகள் எத்தனை? அவை யாவை?

## பகுதி - III - பிரிவு-1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடைத்தருக.** *(2×4=8)*

31. *"இவ்வயின் யாமெலாம் செவ்விதில் துன்னில் தழைப்பதற்கு இடமிலை"*
*- இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.*
32. கழுகுமலைத் தலத்தின் சிறப்புகளைக் காவடிச்சிந்து கொண்டு விளக்குக.
33. 'சேரநாடு செல்வ வளம் மிக்கது' என்ற கூற்றிற்குரிய காரணங்களைக் குறிப்பிடுக.
34. அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாகத் தமிழ்நதி கூறுகிறார்?

### பிரிவு-2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடைத்தருக.** *(2×4=8)*

35. 'என்னுயிர் தமிழ்மொழி என்பேன்' என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப்பற்றினை எழுதுக.
36. திராவிடப் பழங்குடிகளின் இனக்குழுப் பெயர்களுக்கும் மலைக்கும் உள்ள தொடர்பிற்கு எடுத்துக்காட்டு தருக.
37. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதிவழி எடுத்துக்காட்டுக.
38. ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை?


### பிரிவு-3

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி.** *(3×4=12)*

39. வேற்றுமை அணி *(அல்லது)* பிறிது மொழிதல் அணியைச் சான்றுடன் விளக்குக.
40. பாடாண்திணை *(அல்லது)* செந்துறைப் பாடாண்பாட்டு துறையைச் சான்றுடன் விளக்குக.
41. **தமிழாக்கம் தருக.**
அ) The pen is mightier than the sword. ஆ) Knowledge rules the world.
இ) Education is the most powerful weapon, which you can use to change the world.
ஈ) Culture does not make people. people make culture.
42. ***இலக்கிய நயம் பாராட்டுக.மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக.***

*சுதந்திரம் தருகிற மகிழ்ச்சியைக் காட்டிலும்*
*சுகம்தரும் உணர்ச்சியும் வேறுண்டோ?*
*பதம்தரும் பெருமையும் பணம்தரும் போகமும்*
*பார்த்தால் அதைவிடக் கீழன்றோ?*
*இதம்தரும் அறங்களும் இசையுடன் வாழ்தலும்*
*எல்லாம் சுதந்திரம் இருந்தால்தான்*
*நிதம்தரும் துயர்களை நிமிர்ந்துநின் றெதிர்த்திட*
*நிச்சயம் சுதந்திரம் அது வேண்டும்.* - *நாமக்கல் கவிஞர்*

43. ***பகுதி, விகுதி, இடைநிலை ஆகியவற்றைப் பயன்படுத்திச் சொற்களை உருவாக்குக.***




## பகுதி - IV

***அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.*** *(3×6=18)*

44. அ) பாரதிதாசன் ஒரு 'புரட்சிக்கவி' என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க. *(அல்லது)*
ஆ) வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக நீங்கள் கருதும் குறட்பாக்கள் சிலவற்றை விளக்கிக் கட்டுரையாக்குக.
45. அ) 'சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே' என்னும் தலைப்பில் மேடைப்பேச்சிற்கான உரையை உருவாக்குக. *(அல்லது)*
ஆ) பௌத்தக்கல்வி, சமணக்கல்வி, மரபுவழிக் கல்வி முறைகளால் தமிழகக் கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரிக்க.
46. அ) வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக. ***(அல்லது)***
ஆ) நர்த்தகி நடராஜின் நேர்காணல்வழி அறிந்தவற்றைத் தொகுத்துக் கட்டுரை எழுதுக.

## பகுதி - V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** *(4+2=6)*

47. அ) 'ஏடுதொடக்கி' ....... எனத் தொடங்கும் யுகத்தின் பாடலை எழுதுக.
ஆ) 'நோய்நாடி' - எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.



www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with OKEN Scanner